தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590


**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 8047/E/2018**

திரு S.சுப்பையா ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.05.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 26.07.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 30.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு S.சுப்பையா ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்புக் கடிதமானது 14.09.2019 அன்று சார்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தான் ஆஜராகாதது குறித்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும்

தெரிவிக்கவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது.பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு சி.ரத்தினவேல், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 26.05.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் வேப்பனூத்து கிராம நத்த புல எண்.114/4-ல் பொதுத் தெருவில் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதிகளை அகற்ற கோரி கடந்த 16.09.2011 ஆம் தேதி கொட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பிறப்பித்த குறிப்பாணையின் படி ஆக்கிரமிப்பு எதற்காக அகற்றப்படவில்லை என்பதற்கான விபரம் மற்றும் ஆணையின் நகல்கள், வேப்பனூத்து கிராம நத்த புல எண்.114/4-ல் பொதுத் தெருவில் கடந்த 18.11.2011 ம் தேதி போலீஸ் பாதுகாப்பு வழங்கி ஆக்கிரமிப்பு அகற்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்திரவுபடி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதா, அப்படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டிருப்பின் அதன் அறிக்கை நகல், ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை என்றால் அதற்கான காரணம் மற்றும் விபரம், வேப்பனூத்து கிராம நத்த புல எண்.114/4-ல் பொதுத் தெருவில் கடந்த 2011 ஆண்டே ஆக்கிரமிப்பு உள்ளது என அறிக்கை தாக்கல் செய்த பின்பு கடந்த 30.01.2018ம் தேதி மேற்படி புல எண்ணை மீண்டும் அளவீடு செய்ததற்கான காரணம் மற்றும் அதன் விபரம் என 10 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 26.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 30.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதாகவும், அளவீடு செய்து முடித்ததாகவும், மேல்முறையீட்டாளருக்கு 06.12.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்த ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், அளவீடு செய்து முடித்திருந்தாலும், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. எனவே, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **மேல்முறையீட்டாளர் 26.05.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை**

**அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 8047/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு S.சுப்பையா,
எண்.நெ.36, ஜெகஜீவன்ராம் தெரு,
திருவள்ளுவர் நகர்,
பம்மல்,
சென்னை - 75.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*